வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, யூலை - 2019
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education
Northern Province
Term Examination, July - 2019

FWC

| தரம் :- 12 (2020) | ஐரோப்பிய வரலாறு | புள்ளித்திட்டம் |
|---|---|---|



## பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1) 1 | 6) 4 | 11) 2 | 16) 4 |
| 2) 3 | 7) 5 | 12) 1 | 17) 2 |
| 3) 4 | 8) 4 | 13) 1 | 18) 4 |
| 4) 1 | 9) 2 | 14) 3 | 19) 4 |
| 5) 2 | 10) 3 | 15) 5 | 20) 1 |

## பகுதி II - பகுதி A

1) படம் குறித்தல்

## பகுதி B

2)
- மத்திய இத்தாலியின் ரைபர் நதிக்கு அண்மையில் கி.மு 8ம் நூற்றாண்டு காலப்பகுதியில் சிறிய இலத்தீன் அரசாக ரோம் தோன்றியது.
- இலத்தீன் அரசாக ரோம் தோன்றியது.
- அருகிலிருந்த எதிர்நாட்டினரின் தாக்குதலுக்கு முகம் கொடுக்கும் வகையில் பாதுகாப்புக் கோட்டை ஒன்றையும் அமைத்தனர்.
- பலம் பெற்ற எதிர்ச்சக்தியாக இருந்த அற்றஸ்கங்களின் ஆக்கிரமிப்புக்களுக்கு உட்பட்டாலும் கி.மு 6ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் அற்றஸ்கங்களை உரோமபுரி தோற்கடித்தது.
- இதன்பின் தோன்றிய உரோம அரசு இத்தாலி முழுவதும் பரவியது.
- வட ஆபிரிக்காவின் பலமான அரசனான கார்த்தேஜிகளுடன் பியுனிக் யுத்தத்தில் போரிட்டது.
- இவர்களைத் தோற்கடித்த உரோமபுரி இரண்டாவது பியுனிக் யுத்தத்தின் இறுதியில் (கி.மு 218 – கி.மு 106 வரை) வட ஆபிரிக்கா, ஸ்பெயின், சாடீனியா, கோர்சிக்கா ஆகிய பகுதிகளைக் கைப்பற்றி மத்தியதரைப் பகுதியின் மேற்குப் பகுதி முழுவதும் உரோமபுரிக்குட்பட்டுப் பரந்த பேரரசாக வளர்ச்சியடைந்தது.

3) 1. உட்காரணங்கள்.

- மேற்கு ஐரோப்பாவின் ஏனைய நாடுகளை விட இத்தாலியில் சிறப்பாக பழைய உரோமப் பண்பாடுகளின் இயல்புகள் அழிவுறாது இருந்தமை.
- இத்தாலிய பல்கலைக்கழகத்தில் இறையியலைக் கற்பதைவிட சட்டம், வைத்தியம் போன்ற பாடங்களைக் கற்பதில் ஆர்வம் காணப்பட்டமை.
- ஐரோப்பாவின் ஏனைய நாடுகளை விட இத்தாலியில் நிலமானிய முறை பலவீனமடைந்தமை. வர்த்தகம் வளர்ச்சியடைந்தமை. அக்காலத்தில் ஐரோப்பாவில் செல்வந்த நகரம் இத்தாலியில் அமைந்திருந்தமை.
- கலை, இலக்கியங்கள் என்பனவற்றின் வளர்ச்சிக்குத் தமது ஒத்துழைப்பை அளிக்கக்கூடிய, கலையை இரசிக்கக்கூடிய செல்வந்தப் பிரிவினர் அங்கு உருவாகியமை.
- பாப்பரசர்களும் கலைஞர்களுக்கு அனுசரணை வழங்கியதோடு அவர்களது சேவையையும் பெற்றுக் கொண்டமை.
- இத்தாலியில் அக்காலத்தில் நிலவிய அரசியல் முறை பண்டைய கிரேக்கத்தைப் போன்று நகரை முதன்மையாகக் கொண்ட அரசு நிலவியமை.

உதாரணம் : புளோரன்ஸ், வெனிஸ், ஜெனோவா, மிலான்

வெளிக் காரணிகள்

- கொன்ஸ் தாந்திநோபிளிலிருந்த கிரேக்க – இலத்தீன் அறிவு இத்தாலியை நோக்கி நகர்த்தமை.
  1453 ஆம் ஆண்டு கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் கைப்பற்றியதும் கல்விமான்கள் பெறுமதி வாய்ந்த நூல்களுடன் இத்தாலிக்கு வந்தமை. இத்தாலியில் அந்நூல்கள் பலராலும் படிக்கப்பட்டமை, ஆராயப்பட்டமை.

agaram.lk

2. மத்திய காலத்தில் மறைந்திருந்த கிரேக்க – உரோம நாகரிகங்கள் புத்துயிர் பெற்றமையே மறுமலர்ச்சி என்பதினால் கருதப்படும்.
   - கிரேக்க - இலத்தீன் மொழிகளில் மலர்ச்சி ஏற்பட்டமை பின்னர் சுதேச மொழி, இலக்கியங்களினதும் வளர்ச்சி ஏற்பட்டது.
   - மானிட வாதம் எழுச்சியுறல்.
   - கட்டடக் கலையில் முன்னேற்றம் ஏற்படல்.
   - சிற்ப, சித்திரக் கலைகள் வளர்ச்சியுறல்.
   - சிறந்த கலைஞர்கள் தோற்றம் பெற்றனர்.
   - மைக்கல் ஆஞ்சலோ, லியானாடோவின்சி, டொனடெலோ, ரபாயேல்.
   - மறுமலர்ச்சிக் கலைகள் லௌகிகத்திற்கும், இயற்கைக்கும் சாதகமாக அமைந்தன.
   - விஞ்ஞானம் தொடர்பான அறிவு வளர்ச்சியுற்றது.

4) 1. ◆ விவசாயம் மற்றும் குடிசைக் கைத்தொழிலை பிரதானமாக கொண்டிருந்த பொருளாதாரம் தொழிற்சாலை மற்றும் தொழிற்சாலைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் பொருட்களைக் கொண்ட பொருளாதாரமாக மாறியதை கைத்தொழில் புரட்சி என விரிவாகக் குறிப்பிடலாம். 18 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 19 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இங்கிலாந்தில் கைத்தொழில் புரட்சி தோன்றியது. இது இங்கிலாந்தில் தோற்றம் பெற்றமைக்கு பல காரணிகள் ஏதுவாக அமைந்தன.
   - 16 ஆம் நூற்றாண்டிலிருந்து இங்கிலாந்தின் வர்த்தகம் விரிவடைந்தமை.
   - சில வியாபார பொருட்களிற்கான கேள்வி அதிகரித்தமை. (உ – ம் : பருத்தி ஆடை) கைகளால் மாத்திரம் அக்கேள்விக்கு ஏற்ற நிரம்பலை வழங்க முடியாமை போன்ற காரணத்தால் பாரியளவு உற்பத்திகளை மேற்கொள்ளக்கூடிய இயந்திரங்களின் தேவை ஏற்பட்டமை.
   - விஞ்ஞான அறிவு வளர்ச்சி.
   - புதிய கண்டுபிடிப்பாளர்களுக்கு அனுசரணை வழங்கக் கூடிய அவற்றின் மூலம் பயன்பெறக் கூடிய மக்கள் வகுப்பினர் இங்கிலாந்தில் இருந்தமை. (வியாபாரத்தின் மூலம் பணம் படைத்த செல்வந்த வகுப்பினர்)
   - சனத்தொகை வளர்ச்சி.
   - நில அடைப்புக் கொள்கை காரணமாக காணிகளையும், தொழில்களையும் இழந்த மக்கள் காணப்பட்டமை. இவர்களை தொழிற்சாலைகளின் ஊழியர்களாகப் பயன்படுத்தியமை.
   - மூலப்பொருட்களை இலகுவாகப் பெற்றுக் கொண்டமை.
   - இங்கிலாந்தினுள் மேற்குறிப்பிட்ட காரணிகள் அனைத்தும் ஒன்றுடன் ஒன்று இணைந்து ஏனைய உத்திகளும் பரிமாற்றமும்.

2. • தொழினுட்ப, கைத்தொழில், நெடுஞ்சாலை, போக்குவரத்து போன்ற துறைகளில் ஏற்பட்ட புதிய உத்திகளும் பரிமாற்றமும்.
   - கைத்தொழில் புரட்சி முதலாளித்துவ பொருளாதாரத்தின் வள்ர்ச்சிக்கு வித்திட்டமை.
   - இங்கிலாந்து சமூக அமைப்பு மாற்றமுற்றமை. (கைத்தொழில், செல்வந்த வகுப்பு, தொழிலாளர் வகுப்பு)
   - கைத்தொழில் செல்வந்த வகுப்பினருக்கும், பாரம்பரிய நிலப் பிரபுக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டமை. பிற்பட்ட காலங்களில் கைத்தொழில் செல்வந்த வகுப்பினர் பல்வேறு லிபரல் வாத சீர்திருத்தங்களை வென்றெடுத்தமை. (தாராண்மை வாதம்)
   - தொழிலாளர் வகுப்பினர் அடிப்படை தேவைகளைக் கூட நிவர்த்தி செய்ய முடியாத துன்பமான வாழ்க்கையை மேற்கொண்டனர்.
   - பின்னர் தொழிலாளர் படிப்படியாக தமது உரிமைகளை வென்றெடுத்தமை.
   - இங்கிலாந்து சனத்தொகை வளர்ச்சி மாற்றமுற்றமை.
   - நீண்ட காலமாக இங்கிலாந்தின் உற்பத்தி மற்றும் மூலதன நிலை பலமடைந்தமை. பொருளாதார ஜாம்பவானாக மாறியமை.
   - இங்கிலாந்தில் ஏற்பட்ட கைத்தொழிற் புரட்சி 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா, அமெரிக்கா, ஐக்கிய நாடுகள் மற்றும் உலகின் ஏனைய நாடுகளுக்கும் பரவியது. கைத்தொழில் புரட்சியின் விளைவாக புதிய ஏகாதிபத்திய வாதம் வளர்ச்சி கண்டது.

agaram.lk

5)

1. ஸ்டேட் ஜெனரல் கூடப்பட்டமை.

2. சமுதாயம் மூன்று பிரிவுகளாக இருந்தமை.
   - அரசன், பிரபுக்கள்
   - மதகுருமார்.
   - சாதாரண பொதுமக்கள் - பல பிரிவினராக இருந்தமை.
   - வர்த்தகர்கள், செல்வந்தர், உத்தியோகத்தர்களையும், அறிவாளிகளையும் கொண்ட மத்திய வகுப்பினர்.
   - மக்கள் தொகையில் 90 வீதத்தினைக் கொண்டிருந்த விவசாயிகள்.

3. 
   - ஸ்டேட் ஜெனரல் கூட்டப்படல்.
   - தேசிய சபை அமைக்கப்படல்.
   - டெனிஸ் மைதான உறுதியுரை.
   - 1789 ஜீலை 14 ஆம் நாள் பஸ்டீஸ் சிறைச்சாலை தாக்கப்படல்.
   - நிலமானிய முறை நீக்கப்படல்.
   - மனித உரிமைகள் சட்டம் பிரகடனப்படுத்தப்படல்.
   - 1791 செப்ரெம்பர் மாதம் அரசியல் சட்டத்தின் மூலம் அரசனின் அதிகாரம் மட்டுப்படுத்தப்படல்.
   - 1792 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆஸ்திரியாவுக்கு எதிராகப் போர்ப்பிரகடனம் செய்தல்.
   - 1792 ஆம் ஆண்டு முடியாட்சி நீக்கப்பட்டுக் கூட்டாட்சி ஏற்படுத்தப்படல்.
   - 1793 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16ம் லூயி மன்னன் மரண தண்டனை பெறல்.
   - 1793 ஆம் ஆண்டு ஜீன் மாதம் ஜிக்கோபின்கள் ஆட்சியைப் பெறல்.
   - 1795 ஆம் ஆண்டு ஒக்டோபர் முதல் 1799 நவம்பர் வரை டயரக்டரி அமைப்பு செயற்படத் தொடங்கியமை.
   - 1799 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நெப்போலியன் ஆட்சிய அதிகாரம் பெறல்.

4. பிரான்சியப் புரட்சியினால் குறுகிய கால, நீண்ட கால விளைவுகள் ஏற்பட்டன.
   - சமூக அமைப்பு மாற்றமடைதல், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பு உருவாகியது.
   - மானியமுறை பொருளாதார அமைப்பு வீழ்ச்சியுறல்.
   - வரி, நீதிமன்ற முறைமைகள் ஒழுங்கமைக்கப்படல்.
   - பிறப்பினை அடிப்படையாகக் கொண்டல்லாது, திறமையை அடிப்படையாகக் கொண்டு செயற்பட சந்தர்ப்பம் வழங்குதல்.
   - புதிய அரசியல் அமைப்பு.
   - மனித உரிமைகள் தொடர்பான சாசனம் உருவாக்கப்படல்.
   - மத்திய வகுப்பினர் தாம் எதிர்பார்த்த உரிமைகளைப் பெற்றுக் கொள்ளல்.
   - விவசாயிகள் நிலங்களைப் பெறல்.
   - கல்விமுறை முறைசார்பற்றதாக அமைக்கப்பட்டது.

agaram.lk